*சேகரிப்புக் கலையை வளர்ப்போம்* *நாட்டின் மரபுச் செல்வங்களைக் காப்போம்*

# தொண்டை மண்டல நாணயவியல் கழகம்

பதிவு எண். 22/07

நடத்தும்

## "PECOFES" திருவிழாவை முன்னிட்டு
## கல்லூரி நூலக வளாகத்தில்
### பிப்ரவரி - 14, 15 (வியாழன், வெள்ளி)

# பழங்காசுகள் - பழம் பொருட்கள் கண்காட்சி

## கண்காட்சியின் நோக்கங்கள்

- மாணவ, மாணவியரிடையே மனதை ஒரு நிலைப்படுத்திச் சேகரிப்புக் கலையில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- நாட்டின் மரபுச் செல்வங்களையும், வரலாற்று ஆவணங்களையும் பாதுகாத்தல்.
- அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள குடிமக்களின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகிய நாட்டின் தொன்மையான வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னங்கள் பாதுக்காக்கப்பட வேண்டும் என்ற கடமையை மக்களிடத்தில் நினைவூட்டுதல்.
- கண்காட்சியின் பயனாய்க் கடந்த கால வரலாற்றை நினைவு கூர்வதன் மூலம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வையும், நாட்டு பற்றையும் மாணவர்கள், மாணவிகள், பொதுமக்களிடம் ஏற்படுத்துதல்.

## கண்காட்சியின் சிறப்பு அம்சங்கள்

2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலம் மற்றும் பிற்காலச் சேர, சோழ, பாண்டியர், சாதவாகனர், பல்லவர் கால நாணயங்கள், விஜயநகரப் பேரரசு, செஞ்சி, மதுரை நாயக்க மன்னர்களின் காசுகள், ஆற்காடு நவாபுகள், ஹைதர் அலி, திப்புசுல்தான், மைசூர் உடையார், ஐதராபாத் நிசாம், திருவாங்கூர், புதுக்கோட்டை, மராட்டியர் காலத்து நாணயங்கள் இந்தியாவில் சமஸ்தான அரசர்களால் வெளியிடப்பட்ட காசுகள், இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி, போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கில இந்தியப் பேரரசர்கள் வெளியிட்ட அரிய நாணயங்கள், சுதந்திர இந்தியாவின் சிறப்பு வெளியீடுகளான நினைவு நாணயங்கள், உலக நாடுகள் வெளியிட்ட பழைய, புதிய நாணயங்கள் மற்றும் ரஷிய ஜார்மன்னர்கள், ஜெர்மன் ஹிட்லர் ஆட்சிக்கால அரிய பணத்தாள்கள், பிளாஸ்டிக் கரன்சி நோட்டுகள், போர்ப் பதக்கங்கள், உலகின் மிகப்பெரிய, சிறியப் பணத்தாள்கள், பிரஞ்சிந்தியப் பணத்தாள்கள், தங்கத்திலான பணத்தாள்கள், இந்தியா மற்றும் உலகம் முழுவதும் வெளிவந்துள்ள அரிய தபால் தலைகள், அஞ்சல் அட்டைகள், தமிழ் எழுத்துக் கொண்ட நாணயங்கள், அழகிய கலைப்பொருள்கள், ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், சோழர்கால உண்டியல்கள், போர்வாள்கள், பண்டைக்கால ஆபரணங்கள் மற்றும் பல........

*5 நிமிடம் ஒதுக்குவீர் – காணத் தவறாதீர்கள்*








**த.ந கோபிராமன்**
இயந்திரவியல் துறை
நிறுவனர் – தலைவர்
தொண்டை மண்டல நாணயவியல், கழகம், புதுச்சேரி


**தயவு கூர்ந்து இந்த அறிவிப்பைக் கீழே எறிந்துவிடாமல் அருகில் உள்ளவர்களிடம் கொடுத்துப் பயன்பெறச் செய்யுங்கள்.**

*அனுமதி இலவசம் அனைவரும் வருகை தந்து கண்காட்சியைக் கண்டு பயன்பெற வேண்டுகிறோம்.*